எஸ்.டி.சி எண். 67/2021 தேதி:11.03.2025

<u>ம.சா.ஆ.1 ஆன திரு. ரங்கசாமி என்பவர் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>

நான் 10 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். கொரோனாவால் ஏற்பட்ட நஸ்டத்தின் பேரில் நான் தற்போது தொழில் எதுவும் செய்யவில்லை. கொரோனாவிற்கு முன்பு நான் என்ன தொழில் செய்து வந்தேன் என்றால் ஸ்பேர் பார்ட்ஸ் சப்ளை செய்யும் தொழில் செய்து வந்தேன். தமிழ் மற்றும் ஆங்கிலம் எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தமிழ் மட்டும் எழுத படிக்க தெரியும். இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள புகார் மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் கண்ட சங்கதிகள் எனக்கு தெரியும். நான் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். எதிரி எனக்கு 20 வருட கால நண்பர். எதிரி என்னிடம் கடன் வாங்கியதாக சொல்லப்படும் காலகட்டத்தில் ரியல்எஸ்டேட் தொழில் செய்து வந்தார். நான் எனது புகாரில் எதிரி என்னிடம் கடன் கேட்டதாக தான் கூறியுள்ளேன் என்றாலும் நான் கடன் கொடுத்ததாக எங்கும் குறிப்பிடபடவில்லை என்றாலும் சரியல்ல. எதிரியிடம் புகார்தாரர் வாங்கிய கடனுக்காக தான் எதிரி காசோலை வழங்கியதாக எனது புகாரில் காணப்படுகிறது என்றால் சரியல்ல. நான் எனது புகார் பத்தி 4 ல் நான் வாங்கிய கடனுக்காக தான் எதிரி எனக்கு காசோலை வழங்கியதாக காணப்படுகிறது என்றால் சரியல்ல. கிளரிக்கல் தவறினால் அவ்வாறு புகாரில் காணப்பட்டிருக்கும். 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஒரு காசோலையும், டிசம்பர் மாதம் ஒரு காசோலையும் எதிரி என் வசம் கொடுத்தார். இவ்வழக்கு காசோலையில் கண்ட தேதிகளை தவறாக குறிப்பிட்டு தான் நான் தாக்கல் செய்துள்ள வழக்கறிஞர் அறிவிப்பு, புகார் மற்றும் நிரூபண வாக்குமூலம், காணப்படுகிறது என்றால் சரியல்ல. கிளரிக்கல் தவறாக இருக்கலாம்.

2. எனது நிரூபண வாக்குமூலம் பத்தி 4 ல் நான் வாங்கிய கடனுக்காக தான் எதிரி காசோலை வழங்கியதாக காணப்படுகிறது என்றால் சரியல்ல. கிளரிக்கல் தவறாக இருக்கலாம். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் வழக்கு காசோலையில் 10.11.2020 மற்றும் 10.12.2020 என தேதி காணப்படுகிறது. நான் எனது புகார் மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் பொய்யான சங்கதிகளை கூறி தற்போது அதில் கண்ட சங்கதிகளை நானே மறுப்பதாலும் இவ்வழக்கினை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. கிளரிக்கல் தவறாக இருக்கலாம். எதிரிக்கு கடன் கொடுத்ததாக நான் சொல்வதற்கு முகாந்திரம் எதுவும் இல்லை என்றாலும், புகாரிலும், பிரமாண வாக்குமூலத்திலும் எந்த ஒரு தகவலும் காணப்படவில்லை என்றாலும் சரியல்ல.

இந்த வழக்கு நிலைக்கத்தக்க வழக்கு என்றாலும், தள்ளுபடி செய்யத்தக்க வழக்கு என்றாலும் சரியல்ல. நான் எதிரிக்கு 1 சதவீத வட்டிக்கு ரூ.20,00,000/- கடன் வாங்கி தருவதாக சொல்லி ரூ.1,00,000/- ம் கமிஸன் தொகையாக ரொக்கமாக பெற்றுக்கொண்டேன் என்றாலும், மீதமுள்ள கமிஸன் தொகைக்காக வழக்கு காசோலையை தலா ரூ.50,000/- த்திற்கு எதிரியிடம் இருந்து நான் பெற்றுக்கொண்டேன் என்றாலும் சரியல்ல- நான் கூறியபடி நான் எதிரிக்கு தொகை எதுவும் வாங்கி கொடுக்காத நிலையில் எதிரி என்னிடம் ரொக்கமாக கொடுத்த கமிஸன் தொகையான ரூ.1,00,000/- திரும்ப கேட்டதன் அடிப்படையில் தான் அவரை அச்சுருத்த வேண்டி இவ்வழக்கு எதிரி மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

(மறுவிசாரணை இல்லை)

(S/d. Tmt.A.Theviya)
Judicial Magistrate,
Fast Track Court,
Ambattur.

// True Copy //

(S/d. Tmt.A.Theviya)
Judicial Magistrate,
Fast Track Court,
Ambattur.